## பல்வகைமை குடியேற்ற வீசா (Diversity Visa)

### நேர்முகத்தேர்வு

usvisas.state.gov என்ற எமது இணையத்தளத்தில் **பல்வகைமை குடியேற்ற வீசா செயல்முறைகள் (Diversity Visa Process)** என்ற பகுதியிலுள்ள தேவையான குடியேற்ற வீசா விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பித்தல் (DS-260) என்பன உள்ளிட்ட படிமுறைகளைப் பூர்த்தி செய்துவிட்டதன் பின்னர், உங்களிற்காகத் திட்டமிடப்பட்டுள்ள நேர்முகத்தேர்வு பற்றி அறிவிப்பதற்கு கென்ரக்கி தூதரக நிலையத்திலிருந்து (KCC) மின்னஞ்சல் ஒன்றினை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். **இலத்திரனியல் பல்வகைமை வீசா (Electronic Diversity Visa (E-DV)** என்ற இணையத்தளத்தில் நுழைவிற்கான நிலைப்பாட்டினைச் சரிபார்த்துக் கொள்வதற்கு பதிவு செய்து உங்களுடைய பல்வகைமை வீசா நுழைவு உறுதிப்பாட்டு இலக்கத்தினை (DV entry confirmation number) உபயோகிப்பதன் மூலம் உங்களுடைய நேர்முகத்தேர்விற்கான திகதி, நேரம் மற்றும் நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் என்பவற்றைத் தெரிந்து கொள்வதற்காக இந்த மின்னஞ்சல் உங்களை அறிவுறுத்துகின்றது.

நீங்கள் usvisas.state.gov என்ற எமது இணையத்தளத்தில் **நேர்முகத்தேர்வுச் செயல்முறைகளைப் (interview process)** பற்றி அறிந்து கொள்ள முடியும்.

பல்வகைமை குடியேற்ற வீசா விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள். (PDF, 256 KB)